
(பதிப்புரிமையுடையது)

உ
சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை

6 சைவசமய பாடப்பரீட்சை : 2023

தரம் ஆறு



nselva.com

கால அளவு	1.30 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. ஓங்கார வடிவமான இறைவன் யார்?
   1) முருகன் 2) பிள்ளையார் 3) சிவபெருமான் 4) விஷ்ணு
2. விளக்கேற்றுவதற்கு ஏற்ற உலோகம் அல்லாதது எது?
   1) பித்தளை 2) வெள்ளி 3) அலுமினியம் 4) செம்பு
3. திருநீறை அணியும் உத்தம திக்கு எது?
   1) வடக்கு 2) தெற்கு 3) மேற்கு 4) தென்மேற்கு
4. குழந்தைகளுக்கு பெயர்சூட்டும் நிகழ்வு நடைபெறும் நாள் எது?
   1) 31வது நாள் 2) 41வது நாள் 3) 16 வது நாள் 4) 8வது நாள்
5. சிவனுக்குரிய விரதம் பின்வருவனவற்றில் எது?
   1) ஏகாதசி 2) பிரதோஷம் 3) சதுர்த்தி 4) சுக்கிரவார விரதம்
6. திருத்தொண்டர் புராணம் அருளியவர் யார்?
   1) மாணிக்கவாசகர் 2) சுந்தரர் 3) சேக்கிழார் 4) அப்பர் சுவாமிகள்
7. பின்வருவனவற்றில் அதிவீரராம பாண்டியனால் இயற்றப்பட்ட நூல் எது?
   1) குறுந்தொகை 2) வெற்றிவேற்கை 3) ஐங்குறுநூறு 4) பரிபாடல்
8. ஔவையார் ''ஆத்திசூடி''யை எதிலிருந்து ஆரம்பிக்கிறார்?
   1) அன்பு 2) பக்தி 3) தருமம் 4) நன்றி
9. பின்வரும் சடங்குகளில் மங்கலச் சடங்குகளில் அடங்காதது எது?
   1) சோறூட்டல் 2) பெயர் சூட்டல் 3) காது குத்தல் 4) அந்தியேட்டி
10. ஐப்பசி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்சத்துச் சதுர்த்தசியில் வரும் பண்டிகை எது?
    1) புத்தாண்டு 2) தீபாவளி 3) பொங்கல் 4) விளக்கீடு
11. சிவபெருமான் திருநடனம் செய்த இடம் எது?
    1) திருச்சிற்றம்பலம் 2) திருவையாறு
    3) திருவாவடுதுறை 4) திருவெண்ணெய் நல்லூர்
12. ஆலயத்தில் தூலலிங்கம் எனப்படுவது எது?
    1) பலிபீடம் 2) கொடிக்கம்பம் 3) கோபுரம் 4) சண்டேஸ்வரன்
13. மிகக்குறைந்த வயதில் இறைபதம் அடைந்த நாயனார் யார்?
    1) சுந்தரமூர்த்திநாயனார் 2) அப்பர் சுவாமிகள்
    3) சம்பந்தர் 4) மாணிக்கவாசகர்
14. ஞானப்பிரகாச சுவாமிகள் சிவதீட்சை பெற்ற ஆசாரியார் யார்?
    1) அண்ணாமலை 2) அருணாச்சலம் 3) ஆதிசேகர் 4) அம்பலவாணர்
15. பின்வருவனவற்றில் பசு என்பதைக் குறிப்பிடாதது எது?
    1) உயிர் 2) முதல்வன் 3) ஆன்மா 4) சீவன்

16. நாட்டார் வழிபாட்டில் உள்ள ஆண்தெய்வங்களுள் ஒன்று எது?
1) வதனமார் 2) மாரி 3) பேச்சி 4) காளி

17. மருணீக்கியாருக்கு ''நாவுக்கரசு" என்ற பெயர் கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பம் எது?
1) கல் தெப்பமாக மிதந்தபோது 2) படிக்காசு பெற்றபோது
3) சுண்ணாம்பு அறையில் அடைத்தபோது 4) சூலை நோய் நீங்கியபோது

18. தோத்திரப் பாடல்களுள் அடங்காதது எது?
1) கந்தரனுபூதி 2) திருப்புகழ் 3) அபிராமி அந்தாதி 4) திருக்கோவையார்

19. விநாயகர் திருவுருவம் இல்லாத இடத்தில் விநாயகரை வழிபட பயன்படாதது எது?
1) அரிசிமா 2) மஞ்சள் 3) சந்தனம் 4) சாணம்

20. சைவ வினாவிடை என்ற நூலை எழுதியவர் யார்?
1. ஞானப்பிரகாசர் 2) வள்ளுவர் 3) ஆறுமுகநாவலர் 4) ஔவையார்

(20x1=20 புள்ளிகள்**)**

பகுதி - II

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. பின்வரும் தொடக்கத்தையுடைய குறட்பாக்களை எழுதுக.

1. துப்பார்க்குத் துப்பாய .....
.....

2. கெடுப்பதூஉம் கெட்டார்க்கு .....
.....

3. தானம் தவம் இரண்டும் .....
.....

4. நீர் இன்(று) அமையாது .....
.....

(4x 2=8 புள்ளிகள்**)**

2. பின்வரும் திருப்பாடல்களுள் எவையேனும் இரண்டினை வரிக்கிரமமாக எழுதுக.

1. "பூசுவதும் வெண்ணீறு ....." 2. "இடரினுந் தளரினும் ....."

3. "ஒளிவளர் விளக்கே ....." 4. "உலகெலாம் உணர்ந்து ....."

1. .....
.....
.....
.....
.....

2. .....
.....
.....
.....
.....

(6x2=12 புள்ளிகள்**)**

3. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. பிள்ளையாரை தலையில் குட்டி வழிபடுபவருக்கு கிடைப்பவை இரண்டு தருக.
   1)..... 2).....
2. சைவர்கள் வீடுகளில் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய பழக்க வழக்கங்கள் ஏதாவது இரண்டு தருக.
   1)..... 2).....
3. சங்கத் தமிழ் மூன்றில் ஏதாவது இரண்டு தருக.
   1)..... 2).....
4. அப்பூதியடிகளின் பெருமை எந்த திருத்தலத்தில் பாடப்பட்ட பதிகத்தில் உள்ளது? அப் பதிகத்தைப் பாடியவர் யார்?
   1)..... 2).....
5. மாறனாரின் செல்வச்சிறப்பு யாருடன் ஒப்பிடப்படுகிறது? அவர் எந்த நாட்டைச் சேர்ந்த தலைவர்?
   1)..... 2).....
6. ''ஓசை ஒலியெல்லாம்'' என்ற பாடல் எந்த வகைப் பாடலைச் சேர்ந்தது? இதனைப் பாடியவரின் பெயர் யாது?
   1)..... 2).....
7. எமது வாழ்வியல் சடங்குகளின் இரு பிரிவுகளும் எவை?
   1)..... 2).....
8. இறைவனின் சடாமுடியை அலங்கரிப்பவை இரண்டு தருக?
   1)..... 2).....
9. நவராத்திரி காலங்களில் பூஜித்து வணங்கப்படும் தெய்வங்கள் இரண்டு தருக.
   1)..... 2).....
10. குமரகுருபரனைப் பேசவைப்பதற்கு அவரின் பெற்றோர் எந்த ஆலயக் கடவுளிடம் முறையிட்டனர்? குமரகுருபரன் முதலில் பாடிய பாடல் எது?
    1)..... 2).....

(10 x 2=20 புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. அ. தோத்திரங்களை ஓதும் போது முதலில் கூற வேண்டியது எது?

.....

ஆ. தினமும் இறைவழிபாடு செய்வதால் நமக்கு கிடைப்பவை இரண்டு தருக?

.....

இ. பஞ்சபுராணங்கள் எவை?

1) ..... 2) .....

3) ..... 4) .....

5) .....

2. அ. சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் முகமாகக் கொண்டாடப்படும் பண்டிகை எது?

.....

ஆ. விரத காலங்களில் செய்யக்கூடாதவை இரண்டு தருக?

1) ..... 2) .....

இ. விரதங்களை அனுஷ்டிக்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஐந்து தருக?

1) ..... 2) .....

3) ..... 4) .....

5) .....

3. அ. சுந்தரமூர்த்தி நாயனார் முதலில் பாடிய தேவாரம் எது?

.....

ஆ. சுந்தரரை வளர்த்த அரசன் பெயர் என்ன?

.....

இ. சுந்தரருக்கு திருமணம் பேசப்பட்ட பெண் யாரின் மகளாவார்?

.....

ஈ. சுந்தர் செய்த அற்புதங்கள் மூன்று தருக?

1) .....

2) .....

3) .....

4. அ. முப்பொருட்களும் எவை?

1) ..... 2) ..... 3) .....

ஆ. பதிக்கு உள்ள இலக்கணங்கள் எவை?

1) ..... 2) ..... 3) .....

இ. பாசத்திற்கு ''மலம்" என்ற பெயர் வரக் காரணம் என்ன?

.....

ஈ. உயிரை மாசுபடுத்தும் மும்மலங்களும் எவை?

1) ..... 2) ..... 3) .....

5. அ. ஆலயத்திற்கு தினமும் செல்ல முடியாதவர்கள் செல்லக்கூடிய விசேட நாட்கள் இரண்டு தருக?

1) ..... 2) .....

ஆ. ஆலயத்திற்கு செல்லும்போது தட்டில் கொண்டு செல்லும் பொருட்கள் மூன்று தருக?

1) ..... 2) ..... 3) .....

இ. ஆலயத்தில் நாம் செய்யக்கூடிய தொண்டுகள் மூன்று தருக?

1) ..... 2) ..... 3) .....

6. அ. குருபூசை தினம் என்றால் என்ன?

.....

ஆ. பெரிய புராணத்தை அருளிச் செய்தவர் யார்?

.....

இ. பெரிய புராணத்தில் காணப்படும் நாயன்மார்களின் எண்ணிக்கை எத்தனை?

.....

ஈ. பின்வரும் நாயன்மார்களின் குருபூசைத் தினங்களைக் குறிப்பிடுக?

சம்பந்தர் .....

அப்பர் .....

சுந்தரர் .....

மாணிக்கவாசகர் .....

(5 x 8 = 40 புள்ளிகள்**)**